

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 133 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 07 – ஞாயிற்றுக்கிழமை 22 டிசம்பர் 2024 – மதுரை 12+10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 133: Thiruvalluvar Year - 2055 - Margazhi 07 - Sunday 22 December 2024 - Madurai 12+10 Pages ₹ 5.00


## நாடே வியக்கிறது! தமிழ்நாட்டு மக்களின் குரலை

# நாடாளுமன்றத்தில் வீறுகொண்டு முழங்கிய கழக எம்.பி.க்கள்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



**சென்னை, டிச.22-**

**நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்களின் செயல்பாடுகள் குறித்து கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் "தமிழ்நாட்டு மக்களின் குரலை நாடாளுமன்றத்தில் வீறுகொண்டு முழங்கிய கழக எம்.பி.க்கள்" என்று பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டுள்ளார்.**

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்திய நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடர் கடந்த நவம்பர் 25ஆம் தேதி தொடங்கி, நேற்றைய தினம் (டிச.20) முடிவுற்றுள்ளது. இக்கூட்டத் தொடரில் வீறுகொண்ட வீரர்களாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழங்கி இருக்கிறார்கள்.

**மற்ற மாநில எம்.பி.க்களுக்கு முன்னோடியாகச் செயல்படும் கழக எம்.பி.க்கள்!**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகளைப் பார்த்து நாடே வியந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டின் நலனுக்காகக் குரல் கொடுப்பது மாநில உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளை எழுப்பி அவையின் கவனத்தை ஈர்ப்பது ஆகிய இரண்டையும் வெற்றிகரமாகச் செய்து காட்டி இருக்கிறார்கள். மற்ற மாநில எம்.பி.க்களுக்கு முன்னோடிகளாக கழக எம்.பி.க்கள் செயல்படுவதைப் பார்த்து நூறாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் தலைவராக நான் எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

தி.மு.க. எம்.பி.க்கள் என்ன பேசுகிறார்கள். நாட்டை உலுக்கும் முக்கியப் பிரச்சினைகளில் தி.மு.க.வின் நிலைப்பாடு என்ன என்பதை இன்று நாடே உன்னிப்பாக கவனிக்கும் நிலைக்கு இந்த திராவிடப் பேரியக்கம் வளர்ந்திருப்பதை நினைத்தும் பெருமையாக இருக்கிறது.

அதானி விவகாரம், மணிப்பூர் கலவரம் என, தான் பொறுப்பேற்று பதில் சொல்லியே ஆகவேண்டிய அனைத்திலும் கனத்த மவுனம் காக்கும் பிரதமர் அவர்கள், நாடாளுமன்றத்தில் பா.ஜ.க.வினரால் ஜனநாயகம் படாதபாடு பட்டபோது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அவையை நடத்த விரும்புவதைவிட அவையை முடக்க வேண்டும், அரசின் தோல்விகள் குறித்த எந்த விவாதமும் நடைபெற்று விடக்கூடாது என்பதையே மனதில் வைத்து பா.ஜ.க. எம்.பி.க்கள் செயல்பட்டதை நாம் காணமுடிந்தது.

**ஜனநாயகப் பேரியக்கமான தி.மு.க.வின் கவலை!**

ஆக்கப்பூர்வமான விவாதம் செய்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க

## ஒன்றிய அரசு திருந்தாவிடில் தமிழ்நாட்டு மக்கள் மீண்டும் தக்க பதிலடி கொடுப்பர்!

வேண்டும் என்பது நாடாளுமன்றத்தைப் பொறுத்தமட்டில் அரிதான நிகழ்வாக பா.ஜ.க. ஆட்சியில் மாறி விட்டதை எண்ணி ஒரு மிகப்பெரிய ஜனநாயக இயக்கமாம் தி.மு.கழகம் கவலை கொள்கிறது.

குளிர்காலக் கூட்டத் தொடர் குறித்து நாடாளுமன்ற விவகாரங்கள் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில், மக்களவையானது 54.5 விழுக்காடும், மாநிலங்களவை 40 விழுக்காடும்தான் ஆக்கப்பூர்வமாகச் செயல்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைவிட வேதனையான செய்தி இருக்க முடியுமா?

**பா.ஜ.க.வின் உயர் வர்க்க பாசிச முகம் - பசப்பு அரசியல்!**

நமது நாட்டின் பெருமைமிக்க அரசியல் சட்டத்தின் 75ஆவது ஆண்டுக் கொண்டாட்டத்தின்போது - பா.ஜ.க. ஆட்சியின் கையில் "நாடாளுமன்ற ஜனநாயகம்" எப்படி பிய்த்து எறியப்பட்டுள்ளது என்பதற்கு இந்த குளிர்காலக் கூட்டத் தொடரே சாட்சி. அரசியல்சட்டத்தின் 75 ஆண்டு விழாக் கொண்டாட்டத்தின் போது - அச்சட்டத்தை உருவாக்கித் தந்த அண்ணல் அம்பேத்கரை ஒன்றிய உள்துறை அமைச்சரே அவதூறு செய்து இழிவுபடுத்திப் பேசுவது பா.ஜ.க.வின் உயர்வர்க்க பாசிச முகத்தை தோலுரித்துக் காட்டிவிட்டது. ஒருபுறம் அரசியல் சட்டத்திற்கு விழா, இன்னொரு புறம் அதை உருவாக்கித்தந்த அண்ணலுக்கு அவதூறு! இதுதான் பா.ஜ.க.வின் பசப்பு அரசியல் ஆகும்.

**கலைஞர் வளர்த்தெடுத்த ஆற்றலாளர்கள்!**

இவ்வளவு களேபரத்திலும் - திராவிட முன்னேற்றக் கழக மாநிலங்களவை, மக்களவை உறுப்பினர்கள் தங்கள் ஜனநாயகக் கடமையாற்றத் தவறவில்லை என்பது; இவர்கள் கலைஞர் வளர்த்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்ட திராவிட இயக்க ஆற்றலாளர்கள் என்பதை அரங்கேற்றியுள்ளது.

**ஒன்றிய அரசைத் தட்டி எழுப்பிய கழக எம்.பி.க்கள்!**

"ஒரே நாடு ஒரே தேர்தலை" கடுமையாக எதிர்த்துப் பேசிய தி.மு.க. மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, "மதுரை டங்ஸ்டன் கனிமச் சுரங்க அனுமதியை ரத்து செய்யுங்கள்" என்றும், "பேரிடர் மேலாண்மை 2024 திருத்தச் சட்டத்தை எதிர்த்தும்" அனல் பறக்கப் பேசிய தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் தங்கை கனிமொழி கருணாநிதி, "அவைக்குப் பிரதமரே வருவதில்லை" என்று முழங்கிய திருச்சி சிவா, அரசியல் சட்டத்தின் 75 ஆவது ஆண்டில், "அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறு கட்டமைப்புக் கூறுகளும் கேசவானந்த பாரதி வழக்கும்" என அரசியல்சட்ட நுணுக்கம் நிறைந்த ஆ.இராசா, மாநில உரிமைகளைப் பற்றியும், மதவாத அரசியல் அச்சுறுத்தல் குறித்தும் உரையாற்றிய ஜெகத்ரட்சகன், "வானிலை அறிவிப்பு தொழில்நுட்பத்தை மேம்படுத்துக" என தயாநிதி மாறன் என ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் ஒன்றிய அரசைத் தட்டி எழுப்பினார்கள்.

**'முரசொலி' ஏட்டில் தினந்தோறும் பக்கம் பக்கமாக வெளிவந்தது!**

நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவையில் நமது உறுப்பினர்கள் அனைவர் பேச்சும் தினந்தோறும் 'முரசொலி' ஏட்டில் பக்கம் பக்கமாக வெளிவந்தது. இதனைத் தினந்தோறும் படித்தபோது மனதுக்குள் கைதட்டிக் கொண்டேன். தமிழ்நாடு நலன் சார்ந்த நம் நாட்டு நலன் சார்ந்த பேச்சுக்களை நான் மட்டுமல்ல; நாடே கைதட்டி "இப்படியல்லவா நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயல்பட வேண்டும்!" எனப் பாராட்டி வருகிறது.



> **“நமது நாட்டின் பெருமைமிக்க அரசியல் சட்டத்தின் 75ஆவது ஆண்டுக் கொண்டாட்டத்தின்போது - பா.ஜ.க. ஆட்சியின் கையில் "நாடாளுமன்ற ஜனநாயகம்" எப்படி பிய்த்து எறியப்பட்டுள்ளது என்பதற்கு இந்த குளிர்காலக் கூட்டத்தொடரே சாட்சி. அரசியல்சட்டத்தின் 75 ஆண்டு விழாக் கொண்டாட்டத்தின் போது - அச்சட்டத்தை உருவாக்கித் தந்த அண்ணல் அம்பேத்கரை ஒன்றிய உள்துறை அமைச்சரே அவதூறுசெய்து இழிவுபடுத்திப் பேசுவது பா.ஜ.க.வின் உயர்வர்க்க பாசிச முகத்தை தோலுரித்துக் காட்டிவிட்டது. ஒருபுறம் அரசியல் சட்டத்திற்கு விழா, இன்னொரு புறம் அதை உருவாக்கித்தந்த அண்ணலுக்கு அவதூறு! இதுதான் பா.ஜ.க.வின் பசப்பு அரசியல் ஆகும்.”**

**பல்வேறு தலைப்புகளில் உரை! பட்டியலிடப் பக்கங்கள் போதாது!**

தமிழ்நாட்டு மக்கள் "நாற்பதுக்கு நாற்பது" என்ற தேர்தல் வெற்றியைத் தந்த போது "நாடாளுமன்றத்துக்குச் சென்று இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?" என்று சிலர் கேள்வி எழுப்பினார்கள். ஆனால் அவர்களெல்லாம் வாயடைத்துப் போகும் அளவிற்குத் தி.மு.க. எம்.பி.க்களின் செயல்பாடு அமைந்துள்ளது.

அனைத்தையும் பட்டியலிடப் பக்கங்கள் போதாது என்றாலும் - குளிர்காலக் கூட்டத்தொடரில் மட்டும் நம் எம்.பி.க்கள் ஆக்கப்பூர்வமாக எழுப்பிய அடுக்கடுக்கான திட்டங்கள் பற்றி இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

- இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்படும் தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலை,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# சுமார் ரூ.11,368 கோடி மதிப்பீட்டில் 'மதுரை மெட்ரோ ரயில்' திட்டம்!

## திட்ட இயக்குநர் தலைமையிலான தொழில்நுட்பக் குழுவினர் ஆய்வு!

மதுரை, டிச. 22 -

மதுரை மெட்ரோ ரயில்வே திட்டத்தின் செயலாக்கம் குறித்து தொழில்நுட்ப குழுவினர் மதுரை ரயில்வே ஜங்ஷன் மற்றும் மதுரா கல்லூரி பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர்.



மதுரையில் ஒத்தக்கடை திருமங்கலம் இடையே சுமார் 11 ஆயிரத்து 368 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. முதல் கட்டமாக திருமங்கலம் முதல் ஒத்தக்கடை வரை 32 கிலோமீட்டர் தூர வழித்தடம் அமைக்கப்படுகிறது. திருமங்கலம் வசந்த நகர் வரை உயர் நிலை பாலமும், வசந்தநகர் தல்லாகுளம் பெருமாள் கோயில் வரை 10 மீட்டர் ஆழத்தில் பூமிக் கடியிலும், தல்லாகுளம் ஒத்தக்கடை உயர்நிலை பாலம் கொண்ட வழித்தடம் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் 5 கிலோ மீட்டர் சுரங்கப் பாதையிலும், எஞ்சிய 27 கிலோ மீட்டர் மேல்நிலை வழித்தடமாகவும் அமைக்கப்பட உள்ளது.

மதுரை ரயில் நிலையம், பெரியார் பேருந்து நிலையத்தை ஒருங்கிணைத்து ஒன்றும், மீனாட்சி அம்மன் கோயில், கோரிப்பாளையம் என 3 சுரங்கப் பாதை ரயில் நிலையங்கள் ஏற்படுத்தப்பட உள்ளன.

இந்நிலையில், மதுரை மெட்ரோ ரயில்வே திட்டத்தின் செயலாக்கம் குறித்து மெட்ரோ ரயில்வேயின் திட்ட இயக்குநர் அர்ச்சுனன் தலைமையிலான தொழில்நுட்ப குழுவினர் மதுரை ரயில்வே ஜங்ஷன் மற்றும் மதுரா கல்லூரி பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட

# தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம் இன்று (22.12.2024) நடைபெறும்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



ஏற்கனவே அறிவிக்கப்பட்டு, ஒத்திவைக்கப்பட்ட தி.மு.க. தலைமைச் செயற்குழு கூட்டம் கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் இன்று (22-12-2024) **ஞாயிறு காலை** 10.00 **மணி அளவில்** சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : கழக ஆக்கப் பணிகள்**

குறிப்பு : ஏற்கனவே அனுப்பப்பட்ட அழைப்புக் கடிதத்தினை தவறாது கொண்டுவர வேண்டும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.